# இரகுவம்மிசத்தின் ஆற்றுப்படலம் ஓர் ஆய்வு நோக்கு

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
கலாநிதிப் பட்ட ஆய்வாளர், மனிதப் பண்பியல் பட்டப் பின்படிப்புக் கற்கைகளுக்கான நிறுவகம் (PGIHS).பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை, ecumaran@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இரகுவம்மிசம் யாழ்ப்பாண மன்னர் காலப்பகுதியில் ஈழத்தில் தோற்றம் பெற்ற காவியங்களில் ஒன்றாகும். இதனை இயற்றியவர் அரசகேசரி. வடமொழியில் மகாகவி காளிதாசரால் பாடப்பட்ட ரகுவம்ச காவியத்தினைத் தழுவி இக்காவியம் தமிழில் பாடப்பட்டுள்ளது. இரகுவம்மிச காவியத்தின் முதலாவது படலம் ஆற்றுப்படல மாகும். இதில் இருபத்தாறு செய்யுள்கள் உள்ளன. சரயுநதியின் உற்பத்தி, ஊட்டம், வளம், அழகு என்பவற்றை இப்படலம் விரிவாக வர்ணிக்கின்றது. மூலநூலில் இல்லாத படலம் ஒன்றினை அரசகேசரி தனது காவியத்தில் சேர்த்துக் கொண்டதன் காரணம் அல்லது பின்னணி யாது என்பதை வினாவாக முன்வைத்து இந்த ஆய்வு நகர்தப்படுகின்றது. இரகுவம்மிச காவியத் தொடக்கத்தில் ஆற்றுப்படலத்தினை அரசகேசரி அமைத்ததன் நோக்கம், ஆற்றுப் படலத்தினை அவர் கட்டமைத்திருக்கும் நுட்பம், அவரின் கவித்துவம் அதில் வெளிப்படும் வகை, அவரின் தனித்துவத்தினை அடையாளப் படுத்துவதில் ஆற்றுப்படலத்தின் முக்கியத்துவம் என்பவற்றை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு விவரண முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. பகுப்பாய்வு, ஒப்பாய்வு அணுகுமுறைகள் ஆற்றுப்படலத்தினை நுணுகி நோக்குவதற்கும் கம்பராமாயணம் போன்ற காவியங்களுடன் இதனை ஒப்பு நோக்குவதற்கும் பயன்படுத்தப் பட்டுள்ன. இவ்வாய்வின் மூலம் ஆற்றுப்படலம் இரகுவம்மிச காவியத்தில் பெறும் இடம், அதனைக் கட்டமைப்பதில் அரசகேசரி காட்டியிருக்கும் அக்கறை, அதில் அவரின் கலைத்துவம் வெளிப்படும் பாங்கு என்பவற்றினை விளங்கிக் கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** இரகுவம்மிசம், அரசகேசரி, காவியம், ஆற்றுப்படலம்

## அறிமுகம்

ஒரு மொழியின் வளர்சியினையும் அதன் இலக்கியப் பாரம்பரியத்தின் வீச்சினையும் அம்மொழியில் தோன்றிய இலக்கியங்களே சிறப்பாக எடுத்துக்காட்டி நிற்கின்றன. இலக்கியங்களுள் "காவியம்" குறிப்பிட்ட மொழியின் செழுமையையும் உன்னத வளர்ச்சியினையும் அடையாளப் காட்டுவதாக அமைகின்றது. தமிழ் மொழியினைப் பொறுத்த மட்டில் தமிழ்நாட்டிலே காவிய உற்பத்தி சங்கமருவிய காலம் முதலாகவே தோற்றப்

பெற்று விட்டதைக் காணலாம். சோழர்காலம் "காவியகாலம்" என விதந்து பேசத்தக்க வகையில் அக்காலத்தில் வளமான காவியங்கள் பல தோற்றம் பெற்றிருந்தன (செல்வநாயகம்.வி,1960:117). தமிழ்நாட்டிற்கு அண்மையில் இருந்த ஈழத்திலும் 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு தமிழ் இராச்சியம் உருவாகத் தொடங்கியது. இதனை யாழ்ப்பாண அரசு அல்லது ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசு எனக் குறிப்பிடுவார்கள் (சிற்றம்பலம்.சி.க,1992,XXIV). அதன் வலுவான வளர்ச்சியும் நிலைபேறும் ஈழத்தில் இலக்கியங்கள் பல தோற்றம் பெறக் காரணமாக அமைந்தன. அவ்விலக்கியங்களுள் காவியப் படைப்புக்களும் இருந்தமை நோக்குதற்குரியதொன்றாகும். தமிழ்மொழி, கல்வி, இலக்கியம் என்பன ஈழத்தில் பெற்றிருந்த வளர்ச்சியினை அடையாளம் காட்டும் சிறந்த குறிகாட்டியாக இக் காவிய உற்பத்தி அமைந்துள்ளதைக் காணலாம்.

இரகுவம்மிசம்

யாழ்ப்பாண மன்னர்காலப் பகுதியில் இரண்டு காவியங்கள் ஈழத்தில் தோன்றியுள்ளன. கண்ணகிவழக்குரை, இரகுவம்மிசம் என்பனவே அவையாகும். இவற்றுள் செந்நெறிப்பாங்கான காவியத்திற்குரிய அம்சங்களை முழுமையாகத் தழுவியது இரகுவம்மிச காவியமாகும். இதனால் இரகுவம்மிசத்தினைக் "கலைக் காப்பியம்" எனக் குறிப்பிடுவார்கள். இரகுவம்மிச காவியம் அரசகேசரியினால் எழுதப்பட்டது. அரசகேசரி யாழ்ப்பாண மன்னர் பரம்பரையில் வந்தவர் என அறியப்படுகின்றார். இவரை எட்டாம் பரராசசேகரமன்னனின் மருமகனாகவும் பரநிருபசிங்கத்தின் மைத்துனனாகவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது (யாழ்ப்பாண வைபவமாலை: 49-50). தமிழக ஈழ உறவின் பின்புலத்தில் தஞ்சாவூரில் தமிழ்க் கல்வியினைப் பெற்ற அரசகேசரி (வேலுப்பிள்ளை,ஆ,1988:7) பலராலும் மதிக்கப்படுகின்ற, சிறந்த புலமையாளராக விளங்கி வந்துள்ளார் என்பதை தட்சிண கைலாசபுராணத்திற்கு அவர் எழுதிய சிறப்புப் பாயிரத்தினால் அறியலாம். யாழ்ப்பாணத்து நல்லூருக்கு அண்மையில் உள்ள நாயன்மார்கட்டு என்னும் இடத்தில் இவரது மாளிகை இருந்ததாகவும் அதற்கு அண்மையில் இருந்த தாமரைப் பொய்கைக் கரையில் இருந்து அரசகேசரி இக் காவியத்தினைப் பாடி முடித்ததாவும் சொல்லப் படுகின்றது. இக்காவியம் தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்ததோர் மற்றுமொரு செய்தியாகும்.

வடமொழியில் காளிதாசரால் செய்யப்பட்ட ரகுவம்ச காவியத்தின் கதைப் பொருளினைத் தழுவித் தமிழில் அரசகேசரி இக்காவியத்தினை ஆக்கியிருக்கின்றார். சூரியவம்சத்தினைச் சேர்ந்த இரகு, அயன், திலீபன், தசரதன், இராமன், குசன் முதலான மன்னர்களின் வரலாற்றினை இது பேசுகின்றது. இரகுவம்மிசம் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச்சிறப்புக்காண்டம் என மூன்று காண்டங்களையும் இருபத்தாறு படலங்களையும் இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்து நான்கு செய்யுட்களையும் கொண்டது. பெருங்காவியத்திற்குரியதான காவிய இலட்சணங்கள் இக்காவியத்தில் பொருந்தி வந்திருக்கின்றன.

**ஆற்றுப்படலம்**

காப்புச் செய்யுள், பாயிரம் என்பவற்றைத் தொடர்ந்து ஆற்றுப் பட இரகுவம்மிசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருபத்தாறு பாடல்கள் உள்ள இயற்கை வர்ணனை காவியம் ஒன்றில் அமைந்து வருவது பற்றி காவிய இலக்கண விரிவாகக் குறிப்பிடுகின்றது. அந்தவகையில் தண்டியலங்காரம் "மலை, கடல், நா நகர், பருவகாலம், சூரியோதயம் சந்திரோதயம்" பற்றிய வர்ணனைகள் காவிய ஒன்றில் அமைதல் வேண்டும் எனச் சுட்டுகின்றது (தண்டியலங்காரம்:07). இயற் யின் அருங்கொடையாக விளங்கும் ஆறும் காவிய கர்த்தாக்களின் கருத்தினைக் கவ தவறவில்லை. இதனால் ஆறு பற்றிய வர்ணனையையும் கவிஞர்கள் காவியங்கள் சேர்த்துள்ளனர். காவியங்களில் நாடு, நகர வர்ணனைகளோடு சேர்ந்தே ஆற் வருணனை பெரும்பாலும் அமைந்து வந்துள்ளது. கம்பராமாயணம் முதலான ஒரு சி காவியங்களிலும் தலபுராணங்கள் சிலவற்றிலுமே அது தனித்து ஒரு படலம அமைந்து வருவதனைக் காணலாம்.

ஆற்று வர்ணனை தொடர்பாகக் காவியப் புலவர்கள் கரிசனை கொண்டமைக்கு ஆற்றின் அழகு அதன் செழிப்பு, வளம் என்பனவே காரணமாகு நாட்டிற்கு அழகினைத் தருவது ஆறு. அதன் தோற்றம் காண்பவர் கண்களைக் கவரு தன்மையுடையதாகும். வளைந்து நெளிந்து நாட்டினை ஊடறுத்து ஆறு செல்லு அழகும், நீரோடும் போது எழும் மெல்லிய இரைச்சலும், கரைகளுடன் நீரோட்ட மோதி நிகழ்த்துகின்ற குழப்பமும், ஆற்றின் மேலால் தவழ்ந்து வரும் காற்று அள் வரும் குளிர்ச்சியும், நீரோட்டத்துடன் அடித்து வரப்படுகின்ற பூக்கள், வாசனை திரவியங்கள் முதலானவையும் இயல்பாகவே அதில் ஓர் ஈர்ப்பினை ஏற்படுத் விடுகின்றன. ஆற்றில் புனலாடி மகிழ்வதும், ஓடம் செலுத்தி இரசிப்பதும், அத கரையில் உட்கார்ந்தோ உலாவியோ அழகை இரசிப்பதும், ஆற்றுப் பெருக்கு காலங்களில் ஆற்றங்கரைகளில் விழாக்களை நிகழ்த்தி மகிழ்வதும் பண்டு தொட் மக்கள் மத்தியில் இருந்து வந்த வழக்கங்களாகும். இங்ஙனம் மக்களை மகிழ்விக்கு அழகும், இதமும் நிறைந்த ஆறு காவியப் புலவர்களின் கருத்துக்கு இலக்காகியுள்ளது.

ஒரு நாட்டின் செழிப்பிற்கு அடிப்படையே ஆறு ஆகும். அது ஊடறுத்து பாயும் நிலத்தினை எப்பொழுதும் செழிப்புள்ளதாக்குகின்றது. பசுமையா ஆற்றங்கரைகள். பச்சைப் பசேல் என மண்டிக் கிடக்கும் புதர்கள், அதில் நறுமண நிறைந்து கிடக்கும் தேன்நிறைந்த பல வண்ணப் பூக்கள் என்பவற்றைப் புலவர்க காவியங்களில் சிறப்பாகப் பதிவு செய்திருக்கின்றனர். ஆற்றங்கரைகள் மட்டுமன் அதன் இருமருங்கிலும் உள்ள நிலப்பரப்பும் ஆற்று நீரினால் ஊட்டம் பெறுகின்றது இதனால் நாட்டின் நீர் வளம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது. மக்கள் வரட்சியு நீர்ப் பற்றாக்குறையும் பஞ்சமும் இன்றி நிம்மதியாக வாழ்வதற்கு ஆற்றின் ஊட்ட வழிசமைக்கின்றது. "நீரின்றி அமையாது உலகு" எனக் குறிப்பிடுவார்க (திருக்குறள்:20). மனிதனின் உயிர்வாழ்க்கை, நாகரிக வளர்ச்சி என்பவற்றி அடிப்படையாக அமைந்தது நீரே. இந்நீரினை உவந்தளித்த பெருமை ஆற்றுக்கேயிரு கின்றது. இதனால் தான் உலகின் நாகரிக வளர்ச்சிகள் யாவும் நதிக்கரைக அண்டியே உருவாகியிருக்கின்றன. அங்கு மனித இனங்கண்ட முன்னேற்றங்களுக்

எல்லாம் ஆறே அடிப்படையாக அமைந்திருக்கின்றது. இதனால் நாட்டின் செழிப்புக்கும் நிலைபேற்றிற்கும் காரணமான ஆறு காவிய கர்த்தாக்களால் விரும்பப்பட்டதில் வியப்பில்லை.

ஒரு நாட்டினை வளமுடையதாக மாற்றியதும் ஆறுதான். "நாடென்பது நாடா வளத்த"தாக அமைய ஆறே காரணமாகும். ஒரு நாட்டின் பயிர்ச்செய்கையின் விருத்திக்கு ஆறு முதுகெலும்பாக அமைகின்றது. பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீரினை ஆறே தருகின்றது. அத்துடன் பெருக்குக் காலங்களில் வண்டல் மண் படிவுகளை ஆறு தன் கரையின் இருமருங்கும் ஏற்படுத்துகின்றது. இவை பயிர் செழித்து வளர்வதற்கான பசளையாக அமைகின்றன. பயிர்ச்செய்கையின் விருத்தி என்பது பஞ்சம், பசி, பட்டினி அற்ற வாழ்க்கையின் மூலாதாரமாகும். இதனால் மக்களின் வாழ்க்கை செழிப்புறுவதுடன் அவர்களிடத்தில் கலை இலக்கிய வளர்ச்சியும் ஏற்படுகின்றன. மேலும் ஆற்றின் வழியே தான் அக்காலத்தில் வாணிபமும் நடைபெற்றிருக்கின்றது. கடல் வழியாகக் கொண்டு வரப்படும் பொருட்கள் உள்நாட்டிற்குள் சிறு சிறு படகுகள், வள்ளங்கள், தோணிகள் மூலமாக ஆற்றின் வழியாகவே கொண்டு வரப்பட்டன. அது போல உள்நாட்டு உற்பத்திகள் துறைமுகங்களுக்கு ஆற்றின் வழியாகவே கொண்டு செல்லப்பட்டன. அந்தளவிற்கு அக்கால வாணிபத்தில் கனதியான செல்வாக்கினை ஆறு தந்திருக்கின்றது. மேலும் ஆற்றில் நிகழ்த்தப்படும் மீன்பிடியும் தொன்று தொட்டுத் தமிழ்ச் சூழலில் பிரபல்யமாக இருந்து வந்திருக்கின்றது. ஆற்றின் வழியாக பெருக்குக் காலங் களில் அள்ளி வரப்படும் இயற்கையான மருத்துவ மூலிகைகள், வாசனைத் திரவியங்கள், மரக்குற்றிகள் முதலானவையும் மக்களுக்கு பலவகையில் பயன் பாடுடையனவாகும். அந்தளவிற்கு மக்களின் வாழ்க்கையினை வளமுடையதாக்கிய பெருமை ஆற்றுக்கு இருக்கின்றது. இதனால் அது புலவர்களின் கவனத்தினை அதிகம் ஈர்த்து வந்திருக்கின்றது.

### ஆற்றுப் படலத்தின் அமைப்பு

மூலநூலான காளிதாசரின் ரகுவம்சத்தில் ஆற்றுப்படலம் எனத் தனியாக ஒன்றில்லை. ஆனால் அரசகேசரி ஆற்றுப்படலம் என ஒன்றைத் தனியாக அமைத்திருக்கின்றார். மூலத்தினை அப்படியே மொழிபெயர்க்காது தமிழ் இலக்கிய மரபு, தமிழ்ப் பண்பாடு என்பவற்றுக்கு அமைவாக அரசகேசரி செயற்பட்ட இடங்களில் இதுவும் ஒன்று. அரசகேசரி இரகுவம்மிசத்தில் ஆற்றுப்படலத்தினை அமைத்ததில் கம்பராமாயணம் தாக்கத்தினைச் செலுத்தியிருக்கலாம் போலத் தோன்றுகின்றது. அரசகேசரி கம்பனது இராமாயணத்தில் புலமையும், மதிப்பும் கொண்டவர் (பிரசாந்தன்,ஸ்ரீ,2007:XVII). கம்பனது ஆற்றுப் படலத்தின் சிறப்பும் அதில் உள்ள கவிதைகளின் பொருட்சுவையும் கலைத்துவமும் அரசகேசரியைக் கவர்ந்திருக்க வேண்டும். இதன் பின்னணியில் தான் அவர் தனது காவியத்திலும் ஆற்றுப்படலத்தினை அமைத்திருக்கின்றார். கம்பனின் ஆற்றுப்படல அமைப்பு, பாடல்கள் என்பன இரகுவம்மிசத்தில் பிரதிபலிப்பது இதனை ஓரளவு உறுதி செய்கின்றது

ஆற்றுப்படலத்தில் அரசகேசரி சரயு நதியினைப் பாடுகின்றார். "சிறப்புறு சர என்னும் திருநதி" என சரயு நதியினை அவர் அறிமுகம் செய்து வைப்பதனை காணலாம் (இ.வ:ஆற்றுப்படலம்:13). சரயு என்பது வட இந்தியாவில் உள்ள ந யாகும். இது இமாலயத்தில் உற்பத்தியாகின்றது. உத்தராகண்டம், உத்தரப் பிரதேச என்னும் மாநிலங்களை ஊடறுத்துப் பாய்கின்றது. கர்னாலி (ககாரா), சாரத (மகாகாளி) ஆகிய கிளை நதிகள் இதற்கு ஊட்டமளிக்கின்றன. இருக்கு வேதம், இராம யணம் ஆகியவற்றில் இந்நதி பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சூரியகுல மன்னர்களி ராஜதானியாக இருந்த அயோத்தி இந்த நதியின் ஊட்டத்தினாலேயே செழிப்பினை பெறுகின்றது. இன்றும் புனிதம் மிக்க நதியாகக் கொண்டாடப்படும் சிறப்பு சரயுவுக் உண்டு.

அரசகேசரி ஆற்றுப் படலத்தினை கட்டமைத்ததில் சிறப்பான ஒழுங் முறையினைப் பின்பற்றியிருக்கின்றார்.

i. மலைமுகடுகளில் மழைபெய்தல்
ii. வெள்ளம் பெருகுதல்
iii. வெள்ளம் ஆறாக மாறிக் கீழிறங்குதல்
iv. நால்வகை நிலங்களுக்கும் அது ஊட்டமளித்தல்

என்ற வகையில் சரயு நதி பற்றிய வர்ணனை் காவியத்தில் தரப்படுகின்றது.

**i. மழைபெய்தல்**

ஆற்றினது நீர்வளத்தின் ஆதாரம் மழையாகும். மலைமுகடுகளில் குறை வில்லாது பெய்யும் மழைநீரே வெள்ளமாகத் திரண்டு ஆற்றுநீராய் சமதரைக்கு வருகின்றது. சரயுநதியும் மலைமுகடுகள் தந்த மழைநீரினாலேயே ஊட்டம் பெறு கின்றது. இதனால் மலைமுகடுகளில் மழைபெய்யும் காட்சியை மிகவும் தத்துரூபமாக அரசகேசரி வடித்துள்ளார். மேகங்களின் எழுச்சி, அவை கடல்நீரினை உண்டு கருமேகங்களாதல், மலைமுகடுகளில் அவை படிதல், மின்னல் மின்னுதல், இடியிடித்தல், மேகங்கள் குளிர்ச்சியுற்றுப் பெருமழை பொழிதல் என்பன தொடர்பான வர்ணனைகள் அங்கு விரிவாகத் தரப்படுகின்றன. இராமாயணத்தின் ஒரு சில பாடல்களில் விபரிக்கப்படும் இக்காட்சிகள் இரகுவம்மிசத்தின் ஒன்பது பாடல்களில் தரப்படுவது நோக்குதற்குரியதொரு விடயமாகும்.

மேற்படி வர்ணனைகளில் அரசகேசரி இரண்டு நுட்பங்களை வெளிப்படுத்தி யிருக்கின்றார். ஒன்று அவர் சரயு நதிக்குப் புனிதத்தினையும் தெய்வீகத் தன்மையையும் அளிக்கும் வகையில் அதனை தெய்வங்கள், தேவர்கள், தெய்வீகப் பொருட்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டும் இணைத்தும் பேசுகின்றார். எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலை நோக்குக.

"துன்று மைப்புயல் சோனையி னம்மலை
முன்றின் முற்றவு நீர்பொடு மூடலான்
மன்றி னித்த நடம்புரி வானவன்

குன்ற மொத்தது செம்பொற் குடவரோ" (இ.வ. ஆற்றுப்படலம்:08)

மற்றையது அணிகளைத் தாராளமாகச் சேர்த்து வர்ணனைகளை உயிர்த் துடிப்புடையதாக்குகின்றார். வடமொழியில் இரகுவம்சத்தை எழுதிய காளிதாசர் உவமையினைக் கையாளுவதில் சாமர்த்தியம் நிறைந்தவர். "உவமையணி என்றால் காளிதாசருக்கே அது உரியது" ("உபமா காளிதாஸஸ்ய") எனக் கூறும் வழக்கம் உண்டு. காளிதாசரின் சிறப்பினை வெளிப்படுத்தும் உவமைகள் பல ரகுவம்சத்தில் உள்ளன. காளிதாசருக்குத் தான் சற்றுக் குறைந்தவர் இல்லை என்பதை அடையாளப்படுத்துவது போல உவமைகளைத் தாராளமாகப் பெய்து மழைபெய்யும் வர்ணனையை அரசகேசரி உருவாக்கியிருக்கின்றார். ஒரு பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட உவமைகள் கையாளப்பட்டுள்ளதைக் காணலாம். பின்வரும் பாடலை உதாரணமாகக் காட்ட முடியும்.

"தெள்ள னந்தம தாகிச் சிறைகொடு
வெள்ளி வெண்கிரி விண்ணெழல் போலெழா
பள்ள வேலை பருகுபு வஞ்சருட்
கள்ள மென்ன லிருண்டன காரரோ" (இ.வ.ஆற்றுப்படலம்:01)

இங்கு வெண்முகிற் கூட்டங்களின் மேலெழுகையினை வெள்ளிமலை சிறகு பெற்று எழுந்தபோல இருந்தது என்கின்றார். அந்த முகிற் கூட்டங்கள் கடல்நீரை உண்டு கறுத்தமை வஞ்சகரின் உள்ளம் போல இருண்டது என்கின்றார். உவமை களுக்கு இணையாக தற்குறிப்பேற்ற அணியும் பயின்று வருவதனைக் காணலாம். நான்கு பாடல்களில் தொடர்ச்சியாகத் தற்குறிப்பேற்றத்தினை அரசகேசரி கையாளுகின்றார்.

**ii.** வெள்ளம் பெருகுதல்

மழைபெய்தமையைத் தொடர்ந்து வெள்ளம் பெருகும் காட்சியினை அமைத் திருக்கின்றார் அரசகேசரி. பெருமழை அதிக வெள்ளத்தினைத் தோற்றுவிக்கின்றது. வெள்ளம் மலைமுகடுகளில் தோன்றுவதால் அவை வேகமாக ஒன்று திரண்டு கீழ்நோக்கிப் பாய்வதற்குத் தயாராகின்றன. அவற்றின் வேகமான நகர்ச்சி மலைமுகடு களில் எவ்வாறான நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றது என்பதனை விபரிப்பதாக இரண்டு பாடல்கள் இரகுவம்மிசத்தில் தரப்படுகின்றன. மலைமுகடுகளில் உள்ள மரங்களை சாய்த்து உருட்டிக் கொண்டும் அங்கு வாழும் மிருகங்களை மிரட்டி அச்சங்கொண்டு ஓடச்செய்த வண்ணமும் வெள்ளம் பெருகுவதாக அரசகேசரி குறிப்பிடுகின்றார்.

"தேக்ககி லார நாகஞ் சிந்தூரத் திலகந் தீப
மாக்கத மதமா மற்றும் வாரிநேர் வருத லாலே
மேக்குற நிமிரக் குன்றம் வேலைய் மைந்தற் காண்பா
னாக்கமீக் கொள்ளச் சேற லன்னவவ் வருவி மன்னோ" (இ.வ.ஆற்றுப்படலம்:11)

கம்பராமாயணத்தில் வெள்ளப் பெருக்குக் குறித்து ஏழு செய்யுள் களில் விரிவாகப் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. மரங்களைப் புரட்டிக்கொண்டும், மிருகங்களை அச்சமுறச் செய்து கொண்டும் மலைமுகடுகளில் உள்ள பல்வேறுபட்ட பெறுமதியான பொருள்களைத் திரட்டிக்கொண்டு வெள்ளம் கீழ்நோக்கிப் பாயத் தயாராவதாக கம்பர் விவரணத்தினை அமைத்திருக்கின்றார். இந்த வர்ணனைகள் இரகுவம்மிச வர்ணனைகளுடன் ஒப்புநோக்கத்தக்கன.

**iii. வெள்ளம் வேகமாகப் பாய்தல்**

மலைமுகடுகளில் திரண்டு வெள்ளம் கீழ்நோக்கி வேகமாகப் பாய்ந்திறங்குவ பற்றிய வர்ணனையும் இரகுவம்மிசத்தில் தரப்படுகின்றது. வெள்ளம் பல கிளைகளாகப் பிரிந்து துணை நதிகளாகக் கீழறங்குவதாக அரசகேசரி குறிப்பிடுகின்றா அங்ஙனம் கீழிறங்கும் நதிகளின் இணைப்பினால் சரயுநதி தோற்றம் பெறுகின்ற இதனை

"இறப்புவி யனந்த பானு வெண்ணில்கா லெரியு மேனும்
வறப்பில நீரதாய மல்லிகை மலரஞ் சோதிச்
சிறப்புறு சரயு வென்னுந் திருநதி தெண்டங் கொள்ளா
வறப்பய னருத்து வாரி னகலிடத் தருத்து மாக்கம்" (இ.வ.ஆற்றுப்படலம்:13)

எனக் குறிப்பிடுகின்றார் அரசகேசரி. பூமி அழியும் படி அளவில்லாத சூரியர்க தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தாலும் வற்றிப் போகாத அளவுக்கு நீர்வள நிறைந்தது என்றும், மல்லிகைப் பூவின் அழகிய ஒளியையுடைய சிறப்புப் பொருந்த யது என்றும் பூமியில் வாழ்வோருக்கு தன்னிடத்தில் உள்ள செல்வங்களை ஒளிக்கா வாரிக் கொடுப்பது என்றும் சரயுவின் சிறப்பு இக்கவிதையில் எடுத்துக்காட்டப்ப கின்றது. சரயுவின் உலக உயிர்கள் மீதான கருணையினைத் "தெண்டித்து"த் தருமத்தி பயனை ஊட்டுவோருக்கு ஒப்பாகக் காட்டுகின்றார் அரசகேசரி. கம்பரும் சரயுந உலக உயிர்களுக்குத் "தாய்முலையன்னது" எனக்குறிப்பிடுதல் காண்க. உலக உயி களுக்கு உணவுதந்து அவர்களை அன்புடன் பேணுவதால் அது தாய்போன்றது என அவர் குறிப்பிடுகின்றார். அத்துடன் சூரியகுலத்தில் வந்த மன்னர்களின் ஒழுக்கத் தி அடிப்படையே சரயு எனவும் கம்பர் கூறுகின்றார். (கம்பராமாயணம்: 29).

**iv. நால்வகை நிலங்களையும் ஊடறுத்து நதி பாய்தல்**

வெள்ளம் ஆறாக உருவெடுத்து பாய்ந்து செல்லும் அழகினை பல பாடல்களி அரசகேசரி வர்ணித்திருக்கின்றார். இவ்வர்ணிப்பில் அவர் கையாளும் நுட்பங்க குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

அ) ஆறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களையு கடந்து செல்வதாக வர்ணித்தல்.

ஆ) நால்வகை நிலங்களிலும் ஆற்றின் வேகத்தினை வெளிப்படுத்தல்

இ) ஒவ்வொரு நிலப்பகுதியிலும் ஆற்றின் செயல்களை நுட்பமா எடுத்துக்காட்டல்

ஈ) குறிப்பிட்ட நிலப்பகுதிக்கு உரியதான கருப்பொருள்களை வைத்து கொண்டு வர்ணனைய மேற்கொள்ளுதல்

உ) பொருத்தமான அணிகளை கையாண்டு ஆற்றின் நகர்ச்சியை வர்ணித்தல்

என்பனவே அவையாகும். கம்பரும் இராமாயண ஆற்றுப் படலத்தில் இந்த நுட்பங்களைச் சிறப்பாகக் கட்டமைத்திருக்கின்றார். தமிழ் மக்கள் தாம் வாழு பிரதேசத்தை அதன் அமைவிடம், பௌதீகச் சூழல், இயற்கை அமைப்புக்கள் என்ப வற்றை உற்று நோக்கி நானிலம் என்னும் பாகுபாட்டினை உருவாக்கியிருக்கின்றனர்.

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி, காடும் காடும் சார்ந்த இடமும் முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் என்பனவே அவையாகும். "நானிலம்" என்னும் பகுப்பு தமிழ் இலக்கிய மரபில் செல்வாக்குப் பெற்றதொன்றாகும். சங்ககாலம் முதற்கொண்டே இப் பகுப்புமுறை தமிழ் இலக்கியங்களில் காணப்பட்டிருக்கின்றது. தொல்காப்பியம் அகத்திணையியல் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருள்கள் பற்றித் தெளிவான வரையறைகளைத் தந்திருக்கின்றது (தொல்காப்பியம் அகத்திணையியல்:சூ*1-21*). தமிழ் இலக்கிய மரபில் பிரபலம் பெற்றிருந்த இந்தப் பாகுபாட்டினை ஆற்று வருணனையிலும் மிக நுட்பமாக அரசகேரி கையாண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு நிலப் பகுதியிலும் ஆற்றின் வேகம் ஒரேமாதிரியானதாக அமைந்து விடுவதில்லை. மலைப்பாங்கான குறிஞ்சி நிலத்தில் இருந்து அது கீழ் நோக்கிப் பாயும் போது அதன் வேகம் மிக அதிகமாக இருக்கின்றது. ஆற்றங்கரைகளில் உள்ள சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் முதலான மரங்களை வேருடன் பிடுங்கி அள்ளிக் கொண்டு அது வருகின்றன. எதிர்ப்படும் மிருகங்களும் ஆற்றுடன் அடித்துச் செல்லப்படுகின்றது. நீரோட்டம் கரைகளை பயங்கரமாக மோதி அச்சுறுத்துகின்றது என அதன் வேகத்தினை வர்ணிக்கின்றார் அரசகேசரி. முல்லை நிலத்தில் பிரவேசித்த பின்னரும் ஆற்றின் வேகம் அதிகம் குறைவடையவில்லை. அது காடுகளில் உள்ள மரங்கள், மிருகங்கள் மீது கடுமை செய்கின்றது. முல்லை நில மக்களின் குடியிருப்புக் களில் புகுந்து அவர்களை அச்சுறுத்துகின்றது. அவர் சேர்த்து வைத்திருந்த பொருள்களை கவர்ந்து கொண்டு மருதநிலத்திற்குள் நுழைவதாக அவர் பாடுகின்றர். மருதநிலம் சமதரையாகும் இங்கு ஆற்றின் வேகம் பெரும்பாலும் தணிந்து விட்டது. அது குறிஞ்சியையும் முல்லையையும் வேகமாகக் கடந்ததால் களைப்புற்றது போல் மெதுவாகச் செல்கின்றது. மக்களுக்கு இதம் செய்கின்றது. அவர்களது மனதினைக் குளிர்விக்கின்றது. வயல்களுக்கு நீருட்டம் செய்கின்றது. குளங்களை நிறைக்கின்றது. தாமரை, குவளை முதலான மலர்களை மருதநிலமெங்கும் பூத்துக் குலுங்கச் செய்கின்றது என வர்ணிக்கின்றார். நெய்தல் நிலத்திலும் வேகம் தணிந்த நிலையில் செல்லும் ஆறு அங்கும் மரங்களைப் பூத்துக் குலுங்கச் செய்து ஆரவாரமின்றி அமைதியாகக் கடலை நோக்கி நகர்வதாகக் குறிப்பிடுகின்றார். ஆற்றின் வேகத்தையும் அது செய்யும் செயல்களையும் இலக்கிய நயம் வெளிப்படும் வகையில் பதிவு செய்துள்ளமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொரு விடயமாகும்.

நானிலத்திற்கும் உரியதான கருப்பொருள்களை பொருத்தமுறக் கையாண்டு இவ்வர்ணனை அமைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். கருப் பொருள்கள் என்பவை குறிப்பிட்ட நிலப்பகுதிக்கேயுரியதான மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள், பொருள்கள் முதலானவையாகும். இவை அந்தந்த நிலத்திற்கே பிரத்தியேகமானவை. அவற்றை முறைப்படி பயன்படுத்தி வர்ணனைகளை மேற் கொள்ளும் போது அது உயிர்த் துடிப்பானதாகின்றது. இதனால் தான் தமிழ் இலக்கிய மரபில் கருப்பொருள் மயங்கி வராதவகையில் நில வர்ணனைகளை அமைக்கும் மரபு சங்ககாலம் முதற்கொண்டு பேணப்பட்டு வந்திருப்பதனைக் காணலாம். இம் மர பினைச் சிதைக்காத வண்ணம் நானிலங்களுக்கும் பிரத்தியேகமான கருப்பொருள்

களை செவ்வனனே கையாண்டு அரசகேசரி வர்ணனைகளை உருவாக்கியிருக்கின்ற இது அவர் தமிழ் இலக்கிய மரபில் கொண்டிருந்த பெருமதிப்பினை புலமையினையும் ஒருங்கே எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. உதாரண மருதநிலத்தின் ஊடான ஆற்றின் நகர்ச்சி பற்றிய பின்வரும் பாடலை நோக்குக.

துடித்தெழு தொகைய சங்கப் பல்லியத் துவைப்பி னோதை
பிடித்தளி யிசையி னான்ற பெருவய லரங்கம் புக்குச்
செடித்தலைக் கருப்பு மென்பூந் திரரயினை விட்டிட் டோங்கி
நடித்தெரிர் நடந்த தன்றே நடனியர் தம்மின் மன்னோ (இ.வ. ஆற்றுப்படலம்:20)

மேற்படி பாடலில் மருதத்திற்கேயுரிய கருப்பொருள்களான வயல், கரு வண்டு, சங்கு முதலானவை பயின்றுவருதல் நோக்கத்தக்கது.

நானிலங்களை ஊடறுத்து அவற்றினை ஊட்டமுறச் செய்து பாய்கி ஆற்றின் அழகியும் அதன் செயல்களையும் வர்ணிக்கும் போது அரசகே கையாளும் அணிகள் கவனத்திற் கொள்ளத்தக்கன. உவமை, தற்குறிப்பேற் வேற்றுப்பொருள் வைப்பு எனும் அணிகளை இத்தொடர்பில் அவர் அதி கையாண்டுள்ளதைக் காணலாம். உவமையிலும் சிலேடை உவமை மூன் பாடல்களில் கையாளப்படுகின்றது. குறிஞ்சி நிலத்தில் ஆற்றின் வேகத்தின வர்ணிக்கும் போது சிலேடை உவமைகள் கையாளப்படுவதனைக் காணலாம். ஆற்றி சீற்றம் நிறைந்த வேகத்திற்கு கருடனோடும், முருகனின் கைவேலோடு ஆண்சிங்கத்தோடும் சிலேடை உவமை செய்து பாடல்களைப் பாடியிருக்கின்றா இவை பொருட்சுவையும் அணிச்சிறப்பும் நிறைந்த பாடல்களாகும். எடுத் காட்டாக ஆற்றுக்கும் முருகன் கையில் உள்ள வேலுக்கும் சிலேடை உவமம் செ பின்வரும் பாடலை நோக்குக.

"தடவரை எறிந்திட் டாரத் தாருக னூறி வெய்ய
வடவையி னெரிகட் டான வரையிற மடித்து வாரி
விடமென வயிர வன்மா வீட்டுபு செவ்வேள் வென்றிப்
புடைபட விளங்கும் வைவேல் போலவும் போயிற்றன்றே" (இ.வ. ஆற்றுப்படலம்: 15)

ஆற்றினைக் குறித்து வருகின்றபோது "வளைவான மூங்கில்களைப் பிடுங் எறிந்து, மரங்களையும் மலைகளையும் அழித்து, கொடிய வடமுகாக்கினியைப் போ எரிகின்ற கண்களையுடைய யானைகளை அழியும் படி கொன்று, வலிமையுடை சிங்கங்களை அழித்து, சுப்பிரமணியக் கடவுளது பக்கத்திலே பொருந்த விளங் வெற்றியையுடைய கூரிய வேல் போலவும் ஆறு சென்றது" என அமையும். வேலுக் இசைவாகப் பொருள் கொள்ளும் போது "கிரௌஞ்சமலையைப் பிளந்து தாருகனை கொன்று அவுணரை அழியும்படி கொன்று மாமரத்தை வீழ்த்தி விளங்கும் வேல்" எ அமையும். இதேபோன்ற பிற சிலேடை உவமைகளும் சுவைக்கத்தக்கன.

## V.ஆற்றின் குறும்பு

ஆற்றுப்படலத்தின் இறுதியில் ஆறு குறும்பு செய்வதாக அரசகேச பாடுகின்றார். நிலங்களைக் கடந்து கடலைநோக்கி விரையும் ஆறு ஒரு நிலத்துக்குரி

பொருள்களை மற்றொரு நிலத்தில் சேர்த்து அது எந்தநிலம் என்பதை அறிமுடியாத அளவிற்குக் குழப்பத்தினை ஏற்படுத்துவதாகப் பாடுகின்றார். குறிஞ்சியிலுள்ள வேங்கைப் பூக்களை முல்லையின் கண்ணும், முல்லையிலுள்ள காயாம் பூவை மருதத்தின் கண்ணும், மருதத்திலுள்ள தாமரைப் பூவை நெய்தலின் கண்ணும் ஆறு சேர்த்துவிடுவதாகப் பாடுகின்றார்.

"மெய்தகுஞ் சயில மொன்றே வெறியது வெறிய தேனும்
பொய்தகுந்தளவ மெங்கம் பூத்தன புனித வேங்கை
நொய்தில்வண் டடங்களெங்கும் விரிந்தன பூவை நோக்கிற்
கைதையங் கான மெங்கு மலர்ந்தன கமலக்காடே" (இ.வ. ஆற்றுப்படலம்:23)

திணை மயக்கத்தினை ஆறு ஏற்படுத்துவதாகப் பாடப்படும் இப்பாடல் இலக்கியச் சுவை மிகுந்தது.

### இதம் செய்தல்

அரசகேசரி ஆற்றுப்படலத்தின் இறுதி மூன்று பாடல்களிலும் ஆறு நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இதம் செய்வதாகப் பாடுகின்றார். அது மலை களிலும், காடுகளிலும் அள்ளிவரும் செல்வங்களை ஒளித்து வைப்பதில்லை. தனக் கென்று உரிமை கொண்டாடுவதும் இல்லை. அதனை மற்றவர்களுக்குக் கொடுத்து விடுகின்றது. அதுவும் உடனேயே கொடுத்துவிடுகின்றது. இதனால் அது பூலோகக் கற்பகச் சோலையாக நகர்வதாக அரசகேசரி பாடுகின்றார் (இ.வ, ஆற்றுப்படலம்: 25)

மள்ளர்களின் அணையுட் கிடந்து, பூஞ்சோலையின் கண்ணே தவழ்ந்து, வயல்களில் நடந்து, வாவிகளில் பொருந்தத் திரிந்து, எல்லா இடங்களிலும் உலவிய ஆறு ஈற்றில் கடலின் கண்ணே பாய்ந்து கலந்தது என்கிறார் (இ.வ, ஆற்றுப்படலம்: 26)

### ஆய்வின் முடிவு

ஆக மேலே கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்குகின்ற போது, இரகுவம்மிசத்தின் ஆற்றுப்படலம் காவியச் சிறப்புக்கருதி அரசகேசரி தானே புதிதாக அமைத்துக் கொண்டதாகும். மூலநூலான ரகுவம்சத்தில் இது இல்லை. மூலநூலினை அவர் அவர் அப்படியே மொழிபெயர்க்கவில்லை என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இது அமைந்துள்ளது.

ஒரு நாட்டின் அங்குள்ள மக்களின் செழிப்பான வாழ்க்கை, நாகரிகவளர்ச்சி முதலானவற்றிற்கு ஆதார சுருதியாக ஆறு இருப்பதனால் தான் அவர் ஆற்றுப் படலத்தைக் காவியத் தொடக்கத்தில் அமைக்க முனைந்திருக்கின்றார்.

தமிழ் மொழி, தமிழ் இலக்கியமரபு என்பவற்றுக்கு ஏற்றவகையில் ஆற்றுப்படலம் அரசகேசரியால் பாடப்பட்டிருக்கின்றது.

ஆற்றுப்படலத்தினை திட்டமிட்டு நேர்த்தியாக பாடியுள்ளார் அரசகேசரி. ஆற்றுப்படலப் பாடல்களில் அவர் கையாண்டிருக்கும் அணிகள், கவிதை நுட்பங்கள், வர்ணனைகள் என்பன நுனித்து நோக்குதற்குரியன. இவை அரசகேரியின் கவித்துவத்தைப் பறைசாற்றுகின்றவையாக உள்ளன.

காவியத்திற்குள் வாசகர்கள் சலிப்பின்றி நுழைவதற்கான இரசனையும் கவர்ச்சியும், சுவையனுபவமும் நிறைந்த வாயிலாக இரகுவம்மிசத்தின் ஆற்றுப்படலம் அமைந்துள்ளது.

நிறைவுரை.

இயற்கையின் நன்கொடையான ஆற்றின் அழகும் அதன் வளமும் அது பாய்ந்து செல்லும் வழியெல்லாம் ஏற்படுத்தும் குளிர்ச்சியும் புலவர்களின் மனதினைக் கொள்ளை கொண்டிருக்கின்றது. அத்துடன் மக்களின் செழிப்பான வாழ்க்கையினதும் அவர்களது பண்பாட்டுச் சிறப்பினதும் அடிப்படையாகவும் அது விளங்கியிருக்கின்றது. இதனால் தான் பேரிலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் ஆற்று வர்ணனையைப் புலவர்கள் அமைத்திருக்கின்றனர். அரசகேசரியின் ஆழ்ந்த தமிழ் இலக்கியப் புலமை அவருக்கு ஆற்றுப்படலம் அமைக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கின்றது. ஆற்றுப்படலம் அவரது காவியத்திற்கு ஒரு வளமான, கவர்ச்சிமிக்க தொடக்கத்தினைத் தருவதுடன் அவரது கவித்துவத்தினை, கலைத்துவ நேர்த்தியை, காவியப் புனைதிறனை, தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் மீதான பற்றினை அடையாளப்படுத்தும் சிறந்த குறிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள்

இரகுவம்சம் (2007) (பதி) பிரசாந்தன். ஸ்ரீ. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கம்பராமாயணம் பாலகாண்டம் (1964) வை.மு கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பனி, சென்னை

சிவலிங்கராசா. எஸ். (2000) ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி. தனலக்குமி புத்தகசாலை. சுன்னாகம்.

செல்வநாயகம். வ. (1960) தமிழ் இலக்கியவரலாறு. ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண இராச்சியம் (1992) (பதி) சிற்றம்பலம். சி.க. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. திருநெல்வேலி

யாழ்ப்பாண வைபவமாலை (1995) (பதி) சபாநாதன். குல. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மனோகரன். துரை (1997). இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. கலைவாணி புத்தக நிலையம், கண்டி.

வேலுப்பிள்ளை ஆ. (1988). சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

தண்டியலங்காரம் (1926). (உரை) குமாரசாமிப்புலவர். அ. (பதி) அம்பலவாணப்பிள்ளை. கு. சுன்னாகம்

திருக்குறள் (2011). பூம்புகார் பதிப்பம், சென்னை.

தொல்காப்பியம் அகத்திணையியல் (2004). தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி